## ‘வாலிபப் பெரியார்’

# ஏ.வி.பி. ஆசைத்தம்பி 100-வது பிறந்த நாள்!

கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஆனவர், பின்னாளில் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அரும்பணி ஆற்றியவர், ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள்!

தந்தை பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலே வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட இவரை ‘வாலிபப் பெரியார்’ என்று கழகத்தினர் அன்போடு அழைப்பார்கள்.

கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள தன்னுடைய துணைவியாருடன் அந்தமான் சென்ற போது, தலையில் இரத்தக் குழாய் வெடித்ததில் 7.4.1979 அன்று ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள் உயிரிழந்தார்கள்.

**“தன்மான இயக்கத்தின் தளபதிகளில் ஒருவர்;**

**தி.மு.கழகத்தின் வலிமைமிக்க தூண்;**

**நிலைகுலையாத கொள்கை நெஞ்சம் கொண்டவர்;**

**அய்யாவின் தொண்டர்;**

**அண்ணாவின் அருமைத் தம்பி!**

**எனக்கு உற்ற தோழர்!**

**கழகத்தின் கருவூலம்,**

**தன்மான இயக்கத்தின் சிங்கம்,**

**நண்பர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நாவசைந்தால் நாடதிர வேங்கையின் முழக்கமன்றோ கேட்கும்!” -**

என்று, தன்னோடு இணைந்து கழகம் வளர்க்க உழைத்த ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் மறைந்தபோது, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் துயரம் நனைந்து இரங்கல் தெரிவித்தார்கள்.



24.09.1924 - 07.04.1979

ஆசைத்தம்பியைப் பற்றி இனமானப் பேராசிரியர் அவர்கள், “ஆசைத்தம்பியைப் போல, இன்னொருவரை ஈடாகச் சொல்ல முடியாது” என்று குறிப்பிடுவார்கள்.

இத்தகு பெருமைக்குரிய “வாலிபப் பெரியார்” ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களுக்கு நேற்று முன் தினம் (24.9.2023) 100வது பிறந்த நாள் ஆகும்.

‘ஆசைத்தம்பி’களின் தியாகத்தால் வளர்ந்த தன்றோ நமது கழகம்!

ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் 100வது பிறந்த நாளில்,

அவர்கள் கழகத்திற்குச் சிந்திய பேருழைப்பைப் போற்றுவோம்!

அவர்கள் அடியொற்றிக் கழகம் காத்திடச் சூளுரைப்போம்!

## “நின் புகழ் நீடு வாழ்க !”

# மகளிர் மசோதா எனும் வஞ்சகத் திட்டம்!

முதல்வர் உரை... 3-ஆம் பக்கத் தொடர்ச்சி

அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் ஒன்றிய அமைச்சர்களை திடீர் என்று சந்தித்தார்களே? சென்னையில் இருந்து சென்றால் தெரிந்து விடும் என்று, கொச்சியில் இருந்து சென்ற மர்ம சந்திப்புகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியல் என்ன? ஆட்சியில் இருந்தபோது மாநிலத்தின் நன்மைக்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு மூலமாக, தமிழ்நாட்டுக்கு அ.தி.மு.க கொண்டு வந்த நன்மை என்ன? எதுவும் இல்லை.

**ஒரே நாடு - ஒரே தேர்தலை ஆதரிக்கும் - பல்லக்குத் தூக்கி பழனிச்சாமி!**

இந்த லட்சணத்தில் ஒரே நாடு ஒரே தேர்தலை குப்புற விழுந்து ஆதரிக்கிறார் பல்லக்குத் தூக்கி பழனிசாமி. நன்றாக இருக்கிறதல்லவா இந்தப் ’பல்லக்குத் தூக்கி பழனிசாமி’ பட்டம்? என்ன அருகதையில் தமிழ்நாட்டு மக்கள் தனக்கு வாக்களிப்பார்கள் என்று பழனிசாமி பகல் கனவு காண்கிறார்? பழனிசாமி அவர்களே! சட்டமன்றத்துக்கும் சேர்த்து தேர்தல் வந்தால், உங்கள் கட்சி இப்போது இருக்கும் நிலைமைக்கு உள்ளதும் போய்விடும், ஜாக்கிரதை!

**கொத்தடிமைக் கூட்டத்துக்கு - படுதோல்வியை பரிசாகத் தாருங்கள்!**

பா.ஜ.க.வின் பாசிசத் திட்டங்கள் எல்லாவற்றிகும் ஆட்சியில் இருந்த போது தலையாட்டிவிட்டு, இன்றைக்கு பா.ஜ.க.வை எதிர்க்கின்ற மாதிரி மக்களிடம் காட்டிக்கொண்டு, மறைமுகமாக பா.ஜ.க தலைவர்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கும் கொத்தடிமைக் கூட்டத்திற்குக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் போலவே இந்தத் தேர்தலிலும் படுதோல்வியைப் பரிசாகத் தர வேண்டும்.

இதுவரை மக்களை ஏமாற்றிய பா.ஜ.க. - அ.தி.மு.க. இந்தத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட இருக்கிறது. மக்களின் இந்தக் கோபத்தை நமக்கான வாக்குகளாக மாற்ற வேண்டிய கடமை வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களான உங்களுக்கு இருக்கிறது.

**கழகத்திற்கு உழைத்தவர்களை - கழகம் ஒருபோதும் கைவிடாது!**

கட்சிக்காக உழையுங்கள்! மக்களுக்காக உழையுங்கள். அதற்கு உரிய பலன் உங்களைத் தேடி வரும்! இயக்கத்திற்காக இரவு பகல் பாராமல் உழைத்தவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அவர்களை கழகம் எப்போதும் கைவிடாது.

இயக்கத்திற்காக ரத்த நாளங்களாக உழைக்கும் வாக்குச்சாவடி முகவர்களே! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களிடம் வேண்டுகோள் வைத்து உரையாற்றி இருக்கிறேன்.

அடுத்த முறை உங்களைச் சந்திக்கும்போது, நான் வெற்றிச் செய்தியைத்தான் கேட்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்! உழைப்போம்! உழைப்போம்!

நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைத்துச் செல்லுகிறது கழக அரசு!

## அமைச்சர் சக்கரபாணி பேச்சு

திண்டுக்கல்,செப்டம்பர்.25

அனைத்து சமுதாய மக்களையும் அரவணைத்து செல்லும் ஒரே அரசு கழக அரசு என்று அமைச்சர் சக்கரபாணி பேசினார்.

திண்டுக்கல் ஒன்றியம் மலை மாதா திருத்தலம் அமைந்துள்ளது. திருவிழா 17 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதன் முக்கிய நிகழ்ச்சியாக வேளாங்கண்ணி மாதாவின் திருவுருவ தேர் பவனி நடைபெற்றது. உணவு மற்றும் உணவு பாதுகாப்புத் துறை அமைச்சர் அர. சக்கரபாணி கலந்துகொண்டு



திருத்தேர் பவனியை துவக்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

அனைத்து சமுதாய மக்களையும் அரவணைத்து செல்லும் அரசாக கழக அரசு செயல்பட்டு வருகிறது தமிழக முதல்வர் அவர்கள் அனைத்து சமுதாய மக்களுக்கும் அவர்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை உருவாக்கி அதை முழுமையாக செயல்படுத்தி வருகிறார். இங்கு நடந்த திருத்தேர் பவனி விழாவில் பொதுமக்களின் கோரிக்கைளைமுன் வைத்தனர்.

ஆலயத்திற்கு முன்பு பேவர் பிளாக் அமைத்து தரும்படியும், சமுதாய கூடம் கட்டித் தரும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இரண்டு மாதத்திற்குள் பேவர் பிளாக் அமைத்து தரப்படும். நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சமுதாயக்கூடம் அமைத்து தரப்படும் என்றும் அமைச்சர் சக்கரபாணி உறுதியளித்தார். நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டியம்பலம், மாவட்ட கவுன்சிலர் விஜயன் தெற்கு மாவட்ட கழக ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை உட்பட கழக நிர்வாகிகள் ஊர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

## அரளிக்கோட்டையில்

# கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட முகாம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, செப். 26-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகா, அரளிக்கோட்டையில் கலைஞரின் வரும்முன் காப்போம் திட்ட மருத்துவ சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமினை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர் .பெரியகருப்பன் பேசியதாவது:-

கடந்த ஆண்டு மாவட்டத்தில் 12 வட்டாரங்களில் 36 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் 34624 பேர் பயன் பெற்றார்கள். தற்பொழுது இரண்டாவது சிறப்புமருத்துவ முகாம் மாவட்ட அளவில் நடைபெற்று வருகிறது. இந்த முகாமில் பொது மருத்துவம் , இதய நோய்மருத்துவம், சிறுநீரகம், பல் மருத்துவம், கண் மருத்துவம், தோல் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, ஆகியவற்றிற்கான மருத்துவம், மற்றும் மனநல மருத்துவம், எலும்பு, மூட்டு வலி, மருத்துவம், மகளிர் மற்றும் குழந்தைகள்நல மருத்துவம் ஆகியவைகள். சிறந்த மருத்துவர்களால் பரிசோதனை செய்து தேவைப்படுபவர்களுக்கு உரிய சிகிச்சையும் இந்த திட்டத்தின் கீழ் தரப்படுகிறது. இவர்களுக்கு முதல்வர் காப்பீட்டு திட்டத்தில் அரசு மருத்துவ மனையில் உரிய தரமான சிகிச்சை அளிக்கப்படும்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் வரும்முன் காப்போம் திட்டத்தினை அவரது ஆட்சியில் கொண்டு வந்தார் .கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் இத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது. தமிழக முதல்வராக நமது முதல்வர் தளபதி அவர்கள் பதவியேற்ற நாள் முதல் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். தமிழகத்தில் அனைத்து அரசுத்துறைகளும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதில் மருத்துவத்துறை, கல்வி ஆகிய துறைகள் மிகவும் சிறப்பாக பணியாற்றி வருகிறது. மக்களுக்கு பயன் தரும் வகையில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது .இந்த முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வளமுடன் வாழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர்.பெரிய கருப்பன் பேசினார் .

இந்த நிகழ்ச்சியில் 5 நபர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் மருந்து பெட்டகங்கள் ,, 3கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் ஆகியவற்றினை அமைச்சர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சுகாதாரத் துறை துணை இயக்குனர் விஜயசுந்தரம் மாவட்ட கவுன்சிலர்ஏ.கே. மதிவாணன், ஊராட்சி மன்ற தலைவர் புவனேஸ்வரி, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். வட்டார மருத்துவர் ஆயிஷாபானு நன்றி கூறினார். நிகழ்ச்சியில் சிங்கம்புணரி தெற்கு ஒன்றிய செயலாளர் கே. பாலசுப்பிர மணியன், துணைச் செயலாளர் முத்துக்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பில்லப்பன் மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

## நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறை சார்பில்

# நெல்லை - தூத்துக்குடி - தென்காசி மாவட்டங்களில் திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு நேரில் ஆய்வு! பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்பு!

நெல்லை, செப்.26-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நெல்லை,தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு கூட்டம்

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது,நிகழ்வில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து விழா பேருரை ஆற்றினார். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் சிறப்புரையாற்றினார். உடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன்,நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு, குடிநீர் வடிகால் வாரியம் மேலாண்மை இயக்குனர் தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குனர் கிரன் குர்ராலா குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர் சரவணன், மாவட்ட ஆட்சியர்கள் கார்த்திகேயன் (நெல்லை) ரவிச்சந்திரன் (தென்காசி) செந்தில்ராஜ் (தூத்துக்குடி) நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான், தனுஷ் எம்.குமார் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப், மார்க்கண்டேயன், ராஜா, சதன் திருமலை குமார், சண்முகையா,மாநகராட்சி மேயர்கள் சரவணன் (நெல்லை)ஜெகன் பெரியசாமி (தூத்துக்குடி) மகேஷ் (நாகர்கோவில்) மாநகராட்சி ஆணையாளர்கள் சிவகிருஷ்ணமூர்த்தி (நெல்லை)தினேஷ் குமார் (தூத்துக்குடி) ஆனந்தமோகன் (நாகர்கோவில்)துணை மேயர் ராஜ் உள்பட பலர் உள்ளனர்.




மதுரை மாநகராட்சி அண்ணாநகரில் ஹேப்பி ஸ்டீரிட் நிகழ்ச்சிக்கான ‘வாவ் மதுரை’ லோகோவினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் 24.09.2023 அன்று வெளியிட்டு துவக்கி வைத்தார்கள். அருகில் சிறப்பு அழைப்பாளர் திரைப்பட நடிகர் சூரி, மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் கே.ஜே.பிரவீன்குமார், , சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர்கள் திருமதி.சரவணபுவனேஸ்வரி, திருமதி.சுவிதா, மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜானகி ஆகியோர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் மற்றும் மாநகர, ஒன்றிய நகர, பகுதி கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் நடைபெற்றது. கூட்டத்தில் என்.தில்லைசெல்வம், என்.தாமரைபாரதி, பாபு வினிபிரட், எம்.சிவராஜ், நாசரேத் பசலியான், கேட்சன், ஏ.ஆர். பூதலிங்கம்பிள்ளை, எம்.சோமு, திருமதி எஸ்.கரோலின் ஆலிவர்தாஸ், வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட மாநில, மாவட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர பகுதி கழக செயலாளர்கள் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக மாணவர் அணி மாநில செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., இணை செயலாளர் பூவை.ஜெரால்டு ஆகியோரின் ஆலோசனையின் பேரில் மாநில துணை செயலாளர் திருமதி.வீரமணி, மாணவர் அணி பொறுப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களிடம் நேர்காணல் நடத்திய போது எடுத்தபடம். உடன் மாநகர் மாணவர் அணி அமைப்பாளர் த.துரை கோபால்சாமி மற்றும் துணை அமைப்பாளர்கள் சி.திருப்பதி, எம்.எஸ்.மதன்மோகன், ஜி.சந்துரு, பி.அரிசங்கர், பி.நித்யதர்ஷினி உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.